**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 126/2024**

**PW. 1**

**Date: 18.08.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜ்குமார் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | கருணாநிதி | மதம் | |
| கிராமம் | புதுபாக்கம் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **18th August 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் புதுபாக்கம் கார்டேஜ் வேர்க்ஸ் என்ற நிறுவனத்தின் மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01/04/2023 அன்று மாலை 04.00 மணியளவில் நான் என் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டு இருந்தபோது சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது 1 முதல் 3 எதிரிகள் நுழைவு வாயிலின் பூட்டை உடைத்து கொண்டு இருந்தார்கள்.. அது குறித்து நான் கேட்டேன். அதற்கு அந்த மூன்று பேரும் உனக்கு என்டா உன் வேலையை பார்த்து கொண்டு போ என்று திட்டி என்னை சாகதித்து விடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள். என்னை கொத்தா

உங்கமா தெவடியா பையா என்று என்னை ஆபாசமாக என்னை மூவரும் திட்டினார்கள். எனவே நான்  அன்றைய தினமே கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் (**புகார் நகல்**) நான் காவல் நிலையத்தில் கொடுத்தது தான். **அந்த புகார் நகல் பு.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

2. அந்த புகாருக்கு போலிசார் 03/04/2023 அன்று சமுதாய சேவை பதிவேடு வழங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் (**சமுதாய சேவை பதிவேடு நகல்**) போலிசார் வழங்கியது தான். (**03/04/2023 தேதியிட்ட சமுதாய சேவை பதிவேடு நகல் பு.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் நான் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கததால் நான் 04/05/2023 அன்று தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகடத்தில் பஹகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் (**புகார் நகல்)** நான் தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்தில் கொடுத்தது தான். (**04/05/2023 தேதியிட்ட புகார் மற்றும் பதிவு அஞ்சல் ரசீது ஆகியவை பு.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**)  அந்த புகாரை பெற்று கொண்டும் போலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் ( **பதிவு அஞ்சல் இணைய ஒப்புகை**) ஆவண நகல் தான். ( **தேதியிட்டப்படாத இணைவழி பதிவு அஞ்சல் இணை ஒப்புகை ரசீது பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) நான் கொடுத்த புகாரின் பேரில் போலிசார்  எதிரிகளின் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கததால் நான் கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்ககோரி நான் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தேன்.

அம்மனு இந்நீதிமன்றத்தால் தனிநபர் புகாராக எடுக்கப்பட்டது. எனவே எங்கள் நிறுவனத்தின் சொத்து களை சேதப்படுத்தியதற்காக எதிரிகள் உரிய இழப்பீடு கொடுக்கவும் அவர்களின் மீது மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

S/d.K.Nilavarasan, 18.08.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.